# தூய ஆரோக்கிய அன்னை திருவிழா

நவநாள் தயாரிப்பு



## தூய ஆரோக்கிய அன்னை

## ஒற்றுமையின் தாய்

## September 02, 2021

# அன்பில் இணைவோம்

அருட்பணி: ஆண்டவருடைய மீட்பை அறிவியுங்கள்
அவருடைய அரும்பெரும்செயல்களை எடுத்தியம்புங்கள்

Priest : Announce the salvation of the Lord
Proclaim his works among the people

மக்கள்: என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்
People: His mercy is everlasting

அருட்பணி: இறைவார்த்தையால் இவ்வுலகை ஒளிர்வித்த
இறைவனை நாம் வாழ்த்துவோம்
Priest : Bless the Lord our God
Who sent the Word of life into the World

அருட்பணி: ஆண்டவர் தம் செயல்களில் நீதியுள்ளவர்
அவருடைய செயல்கள் புனிதமானவை
அனைத்துலகே ஆண்டவரைப் புகழ்வாயாக
உயிருள்ள அணைத்தும் அவரின் திருநாமத்தை வாழ்த்துவதாக
People: Just is the Lord in all His ways
And Holy in all His works
Let every creature praise Him
and all living beings bless his name

# புகழ்வோம் நம் அன்னையை

அன்னையை வாழ்த்துவோம்
உம்மைத் தேடிவந்தேன் சுமை தீருமம்மா
உலகாலும் தாயே அருள்தாரும் அம்மா

முடமான மகனை நடமாட வைத்தாய்
கடல்மீது தவித்த கப்பலைக் காத்தாய்
பால்கொண்ட கலசம் பொங்கிடச்செய்தாய்

பொருள்கொண்ட சீமான் உன்பாதம் சேர்த்தாய்

கடல்நீரும் கூட உன் கோவில்காண
அலையாக வந்தே உன்பாதம் சேரும்
உலகாளும் தாயே உனைப்பாடும் வேலை
நகர் தேடி வந்தேன் நலம் தாரும் அம்மா

## திருப்பாடலில் செபிப்போம் திருப்பாடல் 133: 1 - 3

சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது
எத்துணை நன்று எத்துணை இனியது
ஆண்டவரே இறைவா சிதறிய
உம மக்களை ஒன்றுகூடியருளும்.

அது ஆரோனின் தலையிலே ஊற்றப்பெற்ற நறுமணத்தைலம்
அவருடைய தாடியினின்று வழிந்தோடி
அவருடைய அங்கியின் விளிம்பை நனைப்பதற்கு ஒப்பாகும்
ஆண்டவரே இறைவா சிதறிய
உம மக்களை ஒன்றுகூடியருளும்.
அது எர்மோனின் மலைப்பணி
சீயோனின் மலைகள்மேல் இறங்குவதற்கு ஒப்பாகும்
ஏனெனில் அங்கிருந்தே என்றுமுள்ள
வாழ்வெனும் ஆசிதனை ஆண்டவர் பொழிந்தருள்வார்
ஆண்டவரே இறைவா சிதறிய
உம மக்களை ஒன்றுகூடியருளும்.
தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவிக்கும் மாட்சிமை உண்டாகுக
தொடக்கத்தில் இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக - ஆமென்
ஆண்டவரே இறைவா சிதறிய
உம மக்களை ஒன்றுகூடியருளும்.

**Psalm 133**
**The Blessedness of Unity**
**A Song of Ascents.**
1 How very good and pleasant it is
when kindred live together in unity!
2 It is like the precious oil on the head,
running down upon the beard,
on the beard of Aaron,
running down over the collar of his robes.
3 It is like the dew of Hermon,
which falls on the mountains of Zion.
For there the Lord ordained his blessing,
life forevermore.

# திருப்பாடல்: 135: 1-13

**அல்லேலூயா! ஆண்டவரின் பெயரைப் புகழுங்கள்;**
**ஆண்டவரின் ஊழியரே! அவரைப் புகழுங்கள்.**
**ஆண்டவரின் கோவிலுக்குள் நிற்பவர்களே!**
**நம் கடவுளின் கோவில் முற்றங்களில் உள்ளவர்களே**
**ஆண்டவரைப் புகழுங்கள்! ஏனெனில் அவர் நல்லவர்!**

**அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயிருந்தாலும்**
**ஒரே உடலாய் இருக்கிறோம்.**
**ஏனெனில் நாம் அனைவரும்**
**ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்.**

**அவரது பெயரைப் போற்றிப் பாடுங்கள். ஏனெனில் அவர் இனியவர்.**
**ஆண்டவர் யக்கோப்பைப் தமக்கென்று தேர்ந்துகொண்டார்.**
**இஸ்ரயேலைத் தமக்குரிய தனிச்ச்சொத்தாக தெரிந்தெடுத்தார்**

**அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயிருந்தாலும்**
**ஒரே உடலாய் இருக்கிறோம்.**
**ஏனெனில் நாம் அனைவரும்**

ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்.

ஆண்டவர் மேன்மைமிக்கவர் என்பதை அறிவேன்:
நம் ஆண்டவர் எல்லாத் தெய்வங்களுக்கும் மேலானவர்.
விண்ணிலும் மண்ணிலும் கடல்களிலும் எல்லா ஆழ்பகுதிகளிலும்
ஆண்டவர் நமக்கு விருப்பமான யாவற்றையும் செய்கிறார்.
அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயிருந்தாலும்
ஒரே உடலாய் இருக்கிறோம்.
ஏனெனில் நாம் அனைவரும்
ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்.

அவர் பூவுலகின் கடையெல்லைகளிலிருந்து மேகங்கள் எழச்செய்கிறார்
மழைபெய்யும்படி மின்னலை. உண்டாக்குகிறார்.
காற்றைத் தம் கிடங்குகளிருந்து வெளிவரச் செய்கிறார்.
ஆண்டவரே! உமது பெயர் என்றுமுளது.
ஆண்டவரே! உம்மைப்பற்றிய நினைவு
தலைமுறை தலைமுறையாக நீடித்திருக்கும்.
அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயிருந்தாலும்
ஒரே உடலாய் இருக்கிறோம்.
ஏனெனில் நாம் அனைவரும்
ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்.

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவிக்கும் மாட்சிமை உண்டாகுக
தொடக்கத்தில் இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக - ஆமென்
அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயிருந்தாலும்
ஒரே உடலாய் இருக்கிறோம்.
ஏனெனில் நாம் அனைவரும்
ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம்.

# Psalm 135
# Praise for God’s Goodness and Might

1 Praise the Lord!
Praise the name of the Lord;
give praise, O servants of the Lord,
2 you that stand in the house of the Lord,
in the courts of the house of our God.
3 Praise the Lord, for the Lord is good;
sing to his name, for he is gracious.
4 For the Lord has chosen Jacob for himself,
Israel as his own possession.
5 For I know that the Lord is great;
our Lord is above all gods.
6 Whatever the Lord pleases he does,
in heaven and on earth,
in the seas and all deeps.
7 He it is who makes the clouds rise at the end of the earth;
he makes lightnings for the rain
and brings out the wind from his storehouses.
8 He it was who struck down the firstborn of Egypt,
both human beings and animals;
9 he sent signs and wonders
into your midst, O Egypt,
against Pharaoh and all his servants.
10 He struck down many nations
and killed mighty kings—
11 Sihon, king of the Amorites,
and Og, king of Bashan,
and all the kingdoms of Canaan—
12 and gave their land as a heritage,
a heritage to his people Israel.
13 Your name, O Lord, endures forever,
your renown, O Lord, throughout all ages.

# இறைவார்த்தைக்குச் செவிமடுப்போம்.

திருத்தூதர் யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 17 : 20 - 26

எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல், அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக! இதனால் நீரே என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும். நாம் ஒன்றாய் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருக்குமாறு நீர் எனக்கு அருளிய மாட்சியை நான் அவர்களுக்கு அளித்தேன், இவ்வாரு நான் அவர்களுக்குள்ளும் நீர் என்னுள்ளும் இருப்பதால் அவர்களும் முழுமையாய் ஒன்றித்திருப்பார்களாக. இதனால் நீரே என்னை அனுப்பினீர் எனவும் நீரே என்மீது அன்புகொண்டுள்ளதுபோல அவர்கள்மீதும் அன்புகொண்டுள்ளீர் எனவும் உலகு அறிந்துகொள்ளும். தந்தையே உலகம் தோன்றுமுன்னே நீர் என்மீது அன்புகொண்டு எனக்கு மாட்சி அளித்தீர். நீர் என்னிடம் ஒப்படைத்தவர்கள் என் மாட்சியைக் காணுமாறு அவர்களும் நான். இருக்குமிடத்திலேயே என்னோடு இருக்கவேண்டுமென விரும்புகின்றேன்.

நீதியுள்ள தந்தையே, உலகு உம்மை அறியவில்லை. நான் உண்மை அறிந்துள்ளேன். நீரே என்னை அனுப்பினீர் எனவும் அவர்களும் அறிந்துகொண்டார்கள். நான் அவர்களோடு இணைந்திருக்கவும் நீர் என்மீது கொண்டிருந்த அன்பு அவர்கள்மீது இருக்கவும் உம்மைப்பற்றி அவர்களுக்கு அறிவித்தேன். இன்னும் அறிவிப்பேன்.
இது கிறிஸ்துவின் வாழ்வு தரும் நற்செய்தி.
கிறிஸ்துவே உம்மைப் புகழ்கின்றோம்.

A reading from the holy Gospel according to St. John: 17: 20-26
20 “I ask not only on behalf of these, but also on behalf of those who will
believe in me through their word, 21 that they may all be one. As you, Father,
are in me and I am in you, may they also be in us,[a] so that the world may
believe that you have sent me. 22 The glory that you have given me I have
given them, so that they may be one, as we are one, 23 I in them and you in
me, that they may become completely one, so that the world may know that

you have sent me and have loved them even as you have loved me. 24 Father, I desire that those also, whom you have given me, may be with me where I am, to see my glory, which you have given me because you loved me before the foundation of the world.
25 “Righteous Father, the world does not know you, but I know you; and these know that you have sent me. 26 I made your name known to them, and I will make it known, so that the love with which you have loved me may be in them, and I in them.”

## இறை வார்த்தையை உள்ளத்தில் இருத்தி சிந்திப்போம்.

நம் உள்ளத்தில் எழும் மன்றாட்டுக்களை நம் ஆரோக்கிய அன்னை வழியில் ஆண்டவர் இயேசுவிடம் சமர்ப்பிப்போம்.

1. அன்னையாம் திருச்சபைக்காக மன்றாடுவோம். நம் தாயத் திருச்சபையை வழிநடத்தும் நமது திருத்தந்தை பிரான்சிஸ் நமது பேராயர் ஜோஸ் கோமஸ், மற்றும் நமது இணை ஆயர்கள் குருக்கள், இறைமக்கள் நம் அன்னை மரியாவைப் போல ஆவியின் வரங்களால் நிரப்பப்பட்டு எல்லோரையும் மகிழ்விக்கும் நற்செய்தியின் கருவிகளாகத் திகழ்ந்திட ஆண்டவரே அன்னை மரியா வழியாக உம்மை மன்றாடுகின்றோம். இறைவா!

   இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நங்கள் கேட்கும் மன்றாட்டுகளுக்குச் செவிசாய்த்தருளும்

2. நமது தளத்திருச்சபைக்காக மன்றாடுவோம். நமது தலைமை ஆயர் மற்றும் இணை ஆயர்கள் நமது மறைமாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களிலும் இறைவார்த்தையின் ஒளியால் நிரப்பப்பட்டு மகிழ்ச்சியிலும் மனநிறைவிலும் நாளுக்கு நாள் வாழ்ந்திட வளர்ந்திட ஆண்டவரே அன்னை மரியா வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

   இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நங்கள் கேட்கும் மன்றாட்டுகளுக்குச் செவிசாய்த்தருளும் .

3. அமெரிக்கா வாழ் இந்தியர்களுக்காகவும் அவர்களின் குடும்பங்களுக்காகவும் மன்றாடுவோம். அன்பிலும் மகிழ்ச்சியிலும்

ஒன்றுபட்டு வாழ்ந்து உலர்கிற்கு ஒளியாய்த் திகழ்ந்திட ஆண்டவரே அன்னை மரியாவழியாக உம்மை மண்டாடுகின்றோம்.

இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நங்கள் கேட்கும் மன்றாட்டுகளுக்குச் செவிசாய்த்தருளும் .

4. புனித ஆரோக்கிய அன்னை பக்தர்களுக்காக மன்றாடுவோம். அன்னை மரியா போல பிறரன்பிலும் இறையன்பிலும் நாளுக்கு நாள் வாழ்ந்து நற்செய்திக்குச் சான்றுபகர்ந்திட அருள்வேண்டி ஆண்டவரே அன்னை மரியா வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

   இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நங்கள் கேட்கும் மன்றாட்டுகளுக்குச் செவிசாய்த்தருளும் .

5. இந்தியாவிலும் உலகின் பல்வேறு நாடுகளிலும் கோவிட்-19 நோய் தொற்றால் இறந்த ஆன்மாக்களுக்கு நித்ய இளைப்பாற்றியை தந்தருளவும் நோய் தொற்றால் துன்புறுவோர்க்கு விடுதலையையும் மருத்துவ குழுவினருக்கு பாதுகாப்பும் தந்தருள ஆண்டவரே அன்னை மரியா வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

   இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நங்கள் கேட்கும் மன்றாட்டுகளுக்குச் செவிசாய்த்தருளும் .

6. நமது தனிப்பட்ட தேவைகளுக்காக: .......ஆண்டவரே அன்னை மரியா வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

   இறைவா! புனித ஆரோக்கிய அன்னை வழியாக நங்கள் கேட்கும் மன்றாட்டுகளுக்குச் செவிசாய்த்தருளும் .

விண்ணகத்தில் இருக்கின்ற ...

# தூய ஆரோக்கிய அன்னை நவநாள் செபம்

மகா பரிசுத்த கன்னிகையே! இயேசுவின் தயாராயிருக்குமாறு
பரிசுத்த மூவொரு கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்ட தூய கன்னிமரியே!

கடவுளுடைய திருப்புதல்வர் உமது திருஉதரத்தில்
மனிதராக அவதரித்தபோதும் ஒன்பது மாதமளவாக
அவரை உமது மாசணுகாத கருவில் தாங்கியபோதும்
நீர் அடைந்த பேரின்பத்தை உமது ஊழியர்களாகிய நாங்கள்
நினைவுகூர அருள்கூர்ந்தமைக்கு உமக்கு நன்றி கூறுகின்றோம்.
எமது அன்பினாலும் தூய வாழ்வினாலும் நீர் அடைந்த பேரின்பத்தை
நாங்களும் அடைய எங்களுக்காக மன்றாடும் தாயே!
துன்பப்படுவோரின் தாயே! இரக்கமிக்க அன்னையே!
நீர் அனுபவித்த பேரின்பத்தைக் கொண்டாடுபவர்களுக்கு
நீர் வாக்களித்துள்ள விசேஷ உதவிவையும் பாதுகாப்பையும்
எங்களுக்கு இவ்வேளையில் பெற்றுத்தந்தருளும்.
கேளுங்கள் கொடுக்கப்படும் என்ற உம்மகன் இயேசுக்கிறிஸ்துவின்
வல்லமைமிக்க வார்த்தையில் நம்பிக்கைகொண்டு
உமது வல்லமைமிக்க மன்றாட்டுகளில் நம்பிக்கைகொண்டு
இந்த நவநாட்களில் நாங்கள் செய்யும் விண்ணப்பங்களை
கடவுளுடைய திருவுளத்திற்கு மாறாயிருந்தால்
எமக்கு எவ்வரம் மிகவும் தேவையோ அவற்றைப் பெற்றுத்தந்தருளும்.

(இங்கு நமது மன்றாட்டுகளை நினைவிற்கொள்ளவும்).

இறைவனின் தாயே! இப்போது உமக்கு வணக்கமாக
நாங்கள் செய்யும் இந்த நவநாளை உம்மில்கொண்டிருக்கும்
ஆழ்ந்த நம்பிக்கையின்பொருட்டு செய்கின்றோம்.
இயேசு மனிதராக அவதரித்தபோது
உமது திருவுளம் அடைந்த தெய்வீக மகிழ்ச்சியை
அதற்கு வணக்கமாக நாங்கள் செய்யும் இந்த நவநாள் பக்தி முயற்சியையும்
இப்பொழுது நாங்கள் சொல்லப்போகும்
அருள் நிறைந்த செபத்தையும் அன்போடு ஏற்றுக்கொள்ளும் தாயே!.

(9 -முறை அருள் நிறைந்த செபம்).

நீர் அணிந்த மணிமுடியில்,
எம் செபங்கள் அத்தனையும் விண்மீன்களென துலங்குமென
ஆழ்ந்த நம்பிக்கைகொள்கிறேன்.
வருந்துவோர்க்கு ஆறுதலே! எம் வேளைநகர் ஆரோக்கியத்தாயே!

நாங்கள் உம்மிடம் மன்றாடும் விண்ணப்பங்கங்கள் நிறைவேறுமாறு
உமக்கு வணக்கமாக இதுவரை புனிதர்களால் செய்யப்பட்ட
எல்லா அரும்பெரும் நிகழ்வுகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கின்றேன்
உமது திருமகனும் எங்கள் ஆண்டவருமான
இயேசு கிறிஸ்துவின் திருஇதயத்தில் பொங்கி வழியும் பேரன்பையும்
அதுபோன்ற உமது அன்பையும் நினைவிற்கொண்டு
உமது அடியார்களாகிய எங்கள் செபத்தை ஏற்று
எம் மன்றாட்டுகளை அடைந்து தந்தருளும் அம்மா. ஆமென்.

## அன்னைக்கு நம் அஞ்சலி.

ஆரோக்கிய மாதாவே - உமது
புகழ்ப்பாடி துதித்திடுவோம்
எந்நாளும் பாடித்துதித்திடுவோம்

அலைகள் மோதிடும் கடற்கரைதன்னில்
வாசித்திட ஆசை வைத்தாயே
பல வகை கலைகளும் பரிலினில் துலங்கிட
அனைவருக்கும் துணைபுரிந்தாயே.

தேன்கமலும் சோலை சூழ்ந்து விளங்கும்
வேளாங்கண்ணியில் அமர்ந்தாயே
வானகமும் இந்த வையகமும்
செழித்தோங்கிட அருள் புரிந்தாயே

## செபிப்போமாக

எல்லாம்வல்ல புனித தந்தையே
ஒற்றுமையின் ஊற்றும் ஒருங்கிணைப்பின் உறைவிடமும் நீரே!
ஒற்றுமையை விரும்புகிறவர் நீரே! அதனால்
உம் திருமகனின் தயாராகிய தூய கன்னிமரியாவுக்கு
மாசுமருவின்மையைத் தேர்ந்தேடுத்தீர்!
சிலுவையில் உயர்த்தப்பட்டபோது அவர் முன்னிலையில்

சிதறுண்ட மனுக்குலத்தை ஒன்றுசேர்த்தீர்!
தூய கன்னிமரியாவின் வேண்டுதல்கள் பெறுபலன்களால்
எமது நாட்டிலுள்ள எல்லாக் எல்லாக்குடும்பங்களும்
புதிய உடன்படிக்கையின் மக்களாக ஒன்றுகூடச் செய்தருளும்.
உம்மோடு தூய ஆவியின் ஒன்றிப்பில் இறைவனாய் வாழ்ந்து ஆட்சி
செய்கின்ற அவர் வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.




**ஒற்றுமையின் தாயே**
**எங்கள் ஆரோக்கியத் தாயே**
**மனுக்குல ஒற்றுமைக்காக மன்றாடும் தாயே...**